24043



සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2025
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2025
General Certificate of Education (Adv. Level) Examination, 2025

දෙමළ I
தமிழ் I
Tamil I

72 T I

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
Three hours

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடம்
Additional Reading Time - 10 minutes

வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

அறிவுறுத்தல்கள் :

※ பகுதி I இல் உள்ள இரு வினாக்களுக்கும் பகுதி II இல் உள்ளவற்றுள் எவையேனும் மூன்று வினாக்களுக்கும் - எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு - விடை எழுதுக.

## பகுதி I

1. மேல்வரும் செய்யுள்களை வாசித்து அவற்றின்கீழ் உள்ள வினாக்களுக்கு விடை தருக.

(அ) கன்றுதன் பயமுலை மாந்த முன்றிற்
றினைபிடி யுண்ணும் பெருங்கல் நாட
கெட்டிடத் துவந்த உதவி கட்டில்
வீறு பெற்று மறந்த மன்னன் போல,
நன்றி மறந்தமையா யாயின், மென்சீர்க்
கலிமயிற் கலாவத் தன்னவிவள்
ஒலிமென் கூந்த லுரியவால் நினக்கே.

(i) தலைவனுடைய நாடு எவ்வாறு விவரிக்கப்படுகிறது? அந்த விவரிப்பின் மூலம் குறிப்பால் உணர்த்தப்படும் விடயம் யாது?

(ii) தலைவியின் அழகு எவ்வாறு விவரிக்கப்படுகின்றது?

(iii) தலைவன் நன்றியுணர்வோடு இருக்கவேண்டும் என்பதை வலியுறுத்தும் பாங்கில் காணத்தக்க நயத்தினை விளக்குக.

(ஆ) முன்னவன் என்று நினைந்திலன். மொய்ம் புலி அன்னான் ஓர்
பின்னவன் நின்றனன் என்றிலன். அன்னவை பேசானேல்,
என் இவன் என்னை இகழ்ந்தது? இவ் எல்லை கடந்து அன்றோ?
மன்னவர் நெஞ்சினில், வேடர் விடும் சரம் வாயாவோ?

(i) இச்செய்யுளில் விபரிக்கப்பெறும் சந்தர்ப்பம் யாது?

(ii) 'முன்னவன்', 'பின்னவன்' என்று சுட்டப் பெறுபவர்கள் யார் யார்?

(iii) இங்கு இடம்பெற்றுள்ள உவமையை இனங்கண்டு, அதைக் கையாண்ட நோக்கத்தை விளக்குக.

(12 + 12 = 24 புள்ளிகள்)

[பக். 2 ஐப் பார்க்க

Past Papers Wiki



2. (அ) பகுதியில் உள்ள கவிதையைப் படித்து அதன்கீழ் உள்ள வினாக்களுக்கு விடை தருக.

**அல்லது**

(ஆ) பகுதியிலுள்ள உரைப்பகுதியைப் படித்து அதன்கீழ் உள்ள வினாக்களுக்கு விடை தருக.

(அ)

விடுத லைக்கு மகளிரெல் லோரும்
வேட்கை கொண்டனம்; வெல்லுவம் என்றே
திடம னத்தின் மதுக்கிண்ண மீது
சேர்ந்து நாம்பிர திக்கினை செய்வோம்.
உடைய வள்சக்தி ஆண்பெண் ணிரண்டும்
ஒருநி கர்செய் துரிமை சமைத்தாள்;
இடையி லேபட்ட கீழ்நிலை கண்டீர்,
இதற்கு நாமொருப் பட்டிருப் போமோ?

திறமை யால்இங்கு மேனிலை சேர்வோம்;
தீய பண்டை இகழ்ச்சிகள் தேய்ப்போம்;
குறைவி லாது முழுநிகர் நம்மைக்
கொள்வ ராண்க ளெனிலவ ரோடும்
சிறுமை தீரநந் தாய்த்திரு நாட்டைத்
திரும்ப வெல்வதில் சேர்ந்திங் குழைப்போம்;
அறவி ழுந்தது பண்டை வழக்கம்
ஆணுக் குப்பெண் விலங்கெனும் அஃதே.

விடியும் நல்லொளி காணுதி நின்றே,
மேவு நாக ரிகம்புதி தொன்றே;
கொடியர் நம்மை அடிமைகள் என்றே
கொண்டு, தாம் முதல் என்றன ரன்றே?
அடியோ டந்த வழக்கத்தைக் கொன்றே,
அறிவு யாவும் பயிற்சியில் வென்றே
கடமை செய்விர்நந் தேசத்து வீரக்
காரி கைக்கணத்தீர், துணி வுற்றே.

(i) இந்தக் கவிதை யாருடைய கூற்றாக அமைந்துள்ளது? ஆணைவிட, பெண் தாழ்ந்தவள் என்ற பாரம்பரிய சமூக மனப்பாங்கில் தங்களுக்கு உள்ள வெறுப்பை அவர்கள் எவ்வெவ்வாறு வெளிப்படுத்துகிறார்கள்?

(ii) பெண்விடுதலைப் போராட்டத்தில் தாங்கள் வெல்லப்போவது தொடர்பில் அவர்கள் எதன்மீது பிரதிக்கினை செய்தார்கள்? அதை எதுவாக உருவகித்தார்கள்?

(iii) பூர்விக காலத்தில் ஆணும் பெண்ணும் சமானமானவர்களாக விளங்கினர் என்ற கருத்து இக்கவிதையில் எவ்வாறு வெளிப்படுத்தப்பட்டுள்ளது?

(iv) ‘குறைவிலாது முழுநிகர் நம்மைக் கொள்வர் ஆண்கள் எனில்’ என்ற நிபந்தனை மூலம் அவர்கள் எதிர்பார்ப்பது யாது? அந்த நிபந்தனை நிறைவேற்றப்பட்டால் அவர்கள் எதைச் செய்வதற்குத் தயாராக இருக்கிறார்கள்?

[பக். 3 ஐப் பார்க்க

**அல்லது**

(ஆ) முகத்தார் கிணற்றடிக்குப் போகின்றார். கட்டியிருக்குஞ் சாறத்துடன் குளிப்பது அவருடைய வழக்கம். 'சனி நீராடு' என்ற வாரத்திற்கு ஒரு முறை; மூன்று பெருநாள் நீராட்டம் பிரத்தியேகமாக வந்து சேரும். தலையிலே மருத்துநீரை வைத்து நன்றாகத் தப்புகின்றார்.

"சித்தப்பா, சித்தப்பா" என்று அசோகன் ஆர்ப்பரிக்கிறான்.

'குமாரசாமி வந்திட்டானோ?'

ஆசையுடன் எட்டிப்பார்க்கிறார். தொட்டாச்சுருங்கி இலைகள் கூம்புகின்றன.

'இல்லை, அவன் மனோகரன்தான். மூண்டு நாலு மாசத்திலை கொஞ்சம் வளர்ந்திருக்கிறான். சொந்தமாகச் சம்பாரிக்க துவங்கீட்டால் கொஞ்சம் பூரிப்புத்தானே? நல்ல தாராளமாகச் சிலவழிக்கிறார். ஓம், போய்க் கொஞ்ச மாசந்தானே? இன்னும் கொழும்புப் பழக்கங்கள் நல்லாப் புடிபடேல்லைப் போலை...... குமாரசாமியை இன்னும் காணேல்லை. சிலவேளை, நல்ல நாளும் பெருநாளுமா எல்லாரும் கொண்டாட்டத்திலை நிக்கேக்கிள்ளை நான் ஏன் குழப்புவான் எண்டுபோட்டு நிண்டிடுவானோ?'

இந்த எண்ணம் ஏற்பட, காலையில் இலேசாக உறுத்திய நெஞ்சில் முள் ஆழமாக இறங்குகின்றது. வலி தாங்கமாட்டாது அவஸ்தைப்படுகின்றார். அவஸ்தைப் பரிகார எத்தனத்தில் பெருமூச்சொன்று நீள்கின்றது..... இயந்திர வேகத்தில் கைகள் துலாக்கயிற்றை மேலும் கீழுமாக இழுக்க வாளி வாளியாகத் தண்ணீர் தலையிலேயே கொட்டப்படுகின்றது.

"நானும் நல்ல வேளைக்குத்தான் வந்திருக்கிறன். எல்லாரும் மருத்து நீராட்டம் முடித்தாயிற்றுப் போலை..... பத்மா இதைப் புள்ளையளுக்குப் பிரிச்சுக் குடு."

'இது நிச்சயமாக் குமாரசாமியின்ரை குரல்தான். உந்த வெண்கலக்கடை யானையின்ரை குரல் அவன்ரைதான்.'

தண்ணீர் காதுக்குள் புகுந்து, தன் மனக்குகை நினைவுகளுக்கு உருவங்கொடுத்தது. மாரீச ஜாலம் நடைபெறுகின்றதோ என்றுகூட ஒரு கணம் நினைக்கின்றார். இருந்தாலும் ஆசை இழுக்கின்றது.

"அப்பு எங்கை."

"அவர் குளிக்கிறார்....." "அப்பு! சின்னண்ணர் வந்திருக்கிறார்" என்று பத்மா குரல் வைக்கின்றாள்.

துளிர்க்கும் நம்பிக்கை, பச்சையின் பசுமையை உறிஞ்ச, மறைப்புத் தட்டிக்கு மேலால் எட்டிப் பார்க்கின்றார்.

முற்றத்தில் குமாரசாமி சிரித்தபடி நிற்கிறான்.

(i) முகத்தாரின் வாழ்க்கை முறையில் உள்ள ஒழுங்கும் பாரம்பரிய வழக்கங்களில் அவருக்கு உள்ள நம்பிக்கையும் எவ்வாறு வெளிப்படுகின்றன?

(ii) குமாரசாமி வராமல் விட்டுவிடுவானோ என்ற ஐயம், முகத்தாரைப் பாதித்த வகையை ஆசிரியர் வெளிப்படுத்தும் சந்தர்ப்பங்களில் காணத்தகும் நயங்களை விளக்குக.

(iii) குமாரசாமி இன்னும் வராததால் உண்டான அவஸ்தைக்கு பரிகாரம் தேடும் வகையிலான முகத்தாரின் செயற்பாடுகள் யாவை?

(iv) "மாரீச ஜாலம் நடைபெறுகிறதோ என்றுகூட ஒரு கணம் நினைக்கின்றார்?"

இந்தக் கூற்று மூலம் வெளிப்படுத்தப்படும் முகத்தாரின் மனநிலை யாது? 'மாரீச ஜாலம்' என்ற தொடரை விளக்குக.

(04 × 4 = 16 புள்ளிகள்)

[பக். 4 ஐப் பார்க்க

Past Papers Wiki



## பகுதி II

**3.** திருக்குறளில் **குற்றங்கடிதல்** என்ற அதிகாரத்தை அடிப்படையாகக் கொண்டு பின்வருவனவற்றை விளக்குக.

(அ) குற்றங்களாகக் கூறப்படுவன

(ஆ) குற்றம் கடிதல் தொடர்பாக பொதுவகையால் கூறப்படுவன

(இ) குற்றம் கடிதல் தொடர்பாக சிறப்பு வகையால் கூறப்படுவன

(ஈ) கையாளப்பட்டுள்ள அணி

(20 புள்ளிகள்)

**4.** கம்பராமாயணம் **குகப்படலத்தில்,** முனிவர் ஆகாய மார்க்கமாகக் கங்கையைக் கடந்தது முதல், யாவரும் பரத்துவாச முனிவரின் ஆச்சிரமம் சேர்ந்தது வரையிலான பகுதியை அடிப்படையாகக் கொண்டு பின்வருவனவற்றை விளக்குக.

(அ) தவத்தின் சிறப்பு

(ஆ) பரதனின் உயர்வு

(இ) பரதன், குகனுக்கு கோசலையை அறிமுகம் செய்யும் விதம்

(ஈ) குகன், பரதன் ஆகியோரை, கோசலை தேற்றும் விதம்

(உ) சுமித்திரை குறித்த சித்திரிப்பு

(20 புள்ளிகள்)

**5.** கு. அழகிரிசாமியின் **தியாகம்** என்ற சிறுகதையில், அதன் பிரதான பாத்திரமான கதிரேசன் செட்டியாரின்,

(அ) தினசரி வாழ்க்கை ஒழுங்கு

(ஆ) கடைச் சிப்பந்திகளிடம் அவர் காட்டும் கண்டிப்பு

(இ) அவர்களிடம் அவர் காட்டும் கருணை

(ஈ) அவரது தியாக சிந்தை

என்பன வெளிப்படும் பாங்கை விளக்குக.

(20 புள்ளிகள்)

**6.** புதுமைப்பித்தனின் **தமிழர் நாகரிகத்தில் கிராம வாழ்க்கை** என்ற கட்டுரையை அடிப்படையாகக் கொண்டு, பின்வருவனவற்றை விளக்குக.

(அ) நாகரிகம் பற்றிய ஆசிரியரின் கருத்து

(ஆ) பட்டணத்துக்காரரின் பட்டணத்து வாழ்க்கைமுறை

(இ) அவர்கள் கிராமத்திலும் வாழும் பட்டணத்து வாழ்க்கைமுறை

(ஈ) கிராமத்து மக்கள் மற்றவருடன் பழகும் முறை

(20 புள்ளிகள்)

**7.** வேந்தனாரின் **கவிஞன்** எனும் கவிதையில்,

(அ) உண்மைக் கவிஞரின் இயல்பு

(ஆ) நிலையாத கவிதைக்கும் நிலைத்து நிற்கும் கவிதைக்கும் இடையிலான வேறுபாடு

(இ) பொய்மைக் கவிஞர் பற்றிய ஏளனப் பார்வை

(ஈ) பாரதியின்மேல் கவிஞருக்குள்ள மதிப்பு

என்பன வெளிப்படுமாற்றை விளக்குக.

(20 புள்ளிகள்)

**8.** பின்வருவனவற்றுள் எவையேனும் **இரண்டினை** விளக்குக.

(அ) **மணிமேகலை** பாடப்பகுதியில் வெளிப்படும் சாத்தனாரின் வர்ணனைத் திறம்

(ஆ) திருப்பாணாழ்வாரின் **அமலனாதிபிரான் பதிகத்தில்** வெளிப்படும் திருவரங்கனின் பாதாதிகேச அழகு

(இ) வ. ரா. வின் **சம்பாசணை ஒரு கலை** என்ற கட்டுரையில் வெளிப்படும் மகாத்மா காந்தியின் சம்பாசணைத் திறன்

(ஈ) வீரமாமுனிவரின் **தேம்பாவணி காட்சிப்படலத்தில்** வெளிப்படும் யேசுபாலன் மேலதான முல்லைநில இடையர்களின் ஆர்வம்

(உ) அப்துல்ஸமதுவின் **எனக்கு வயது பதின்மூன்று** சிறுகதையில் வெளிப்படும் சல்மாவின் சுதந்திர உணர்வு

(20 புள்ளிகள்)

* * *

24043

AL/2025/72/T-II

සියලු ම හිමිකම් ඇවිරිණි /முழுப் பதிப்புரிமையுடையது/All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2025
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2025
General Certificate of Education (Adv. Level) Examination, 2025

දෙමළ II
தமிழ் II
Tamil II

72 T II

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
Three hours

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடம்
Additional Reading Time - 10 minutes

வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

சுட்டெண் : ....................................

**அறிவுறுத்தல்கள் :**

※ பகுதி **I** இல் உள்ள **மூன்று** வினாக்களுக்கும் பகுதி **II** இல் உள்ளவற்றுள் எவையேனும் **இரண்டு** வினாக்களுக்கும் - எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு - விடை எழுதுக.

※ பகுதி **I** இல் முதலாம் வினாவில் **இருபது** வினாக்கள் **தனியாகத்** தரப்பட்டுள்ளன. அவற்றுக்கான விடைகளை **இவ்வினாத்தாளிலேயே** எழுதி, அதனை உமது ஏனைய விடைத்தாள்களின்மேல் வைத்து இணைத்துக் கொடுக்கவும்.

## பகுதி I

**1.** எல்லா வினாக்களுக்கும் விடை தருக.

ஒவ்வொரு கூற்றுக்கும் கீழே ஐந்து விடைகள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் மிகப் பொருத்தமான விடையைத் தெரிந்து, அதன் இலக்கத்தை அடைப்புக்குறிக்குள் எழுதுக.

1.1 பின்வருவனவற்றுள் அரை உயிர்

(1) ஔ (2) ய் (3) ஊ (4) கௌ (5) ∴ (……)

1.2 பின்வருவனவற்றுள் பல்முக்கொலி

(1) ன் (2) ஞ் (3) ந் (4) ண் (5) ங் (……)

1.3 'த'கரம் வேறுபட்டு ஒலிக்கும் சொல்

(1) வந்தேன் (2) கதவு (3) இதயம்
(4) தேர்வு (5) வாழ்தல் (……)

1.4 பின்வருவனவற்றுள் பகுபதம்

(1) விருந்து (2) பருந்து (3) மருந்து
(4) இருந்து (5) வருந்து (……)

PAST PAPERS WIKI

1.5 இயல்பு புணர்ச்சி இடம்பெற்ற சொல்

(1) வந்தான் (2) தேயிலை (3) சொற்கள்
(4) படங்கள் (5) தேநீர் (……)

[பக். 2 ஐப் பார்க்க

1.6 இயல்பாகப் புணரத்தக்க சொற்சோடி
(1) என்னை + கேட்டான் (2) அ + மனிதன் (3) மரம் + கொப்பு
(4) திருநிறை + செல்வி (5) புளி + பழம் (……)

1.7 சாரியை இடம்பெற்ற சொல்
(1) மாதுளம்பழம் (2) வாழைப்பழம் (3) பலாப்பழம்
(4) கொய்யாப்பழம் (5) மாம்பழம் (……)

1.8 பெயரடையை ஏற்காத பெயர்ச்சொல்
(1) மரம் (2) இசை (3) மறைவு
(4) ஆட்டம் (5) ஓடியமை (……)

1.9 அமைப்பு ரீதியாகத் தனித்து நிற்கும் கூட்டுப் பெயர்
(1) மதுசாரம் (2) மலர்மாலை (3) பேசுபொருள்
(4) பண்டகசாலை (5) பள்ளியறை (……)

1.10 பால்விகுதி மூலம் ஆண், பெண் வேறுபாடு உணர்த்தும் சொல்
(1) மாணவர் (2) கவிஞன் (3) தந்தை
(4) தாய் (5) தொழிலாளி (……)

1.11 'ஆன்றோர்க்கு அழகு அடக்கம்' இங்கு இடம்பெற்றுள்ள 'கு' உருபின் பொருள்
(1) தகுதி (2) பகை (3) கொடை (4) நட்பு (5) முறை (……)

1.12 இருதிணை, ஐம்பால், மூவிடத்துக்கும் பொதுவான வினை
(1) தனிவினை (2) கூட்டுவினை (3) வியங்கோள்வினை
(4) செய்வினை (5) துணைவினை (……)

1.13 விகுதியால் காலம் உணர்த்தும் சொல்
(1) வந்தேன் (2) வருகிறான் (3) வருவர்
(4) வரும் (5) வரவில்லை (……)

1.14 பின்வருவனவற்றுள் பொதுவினை
(1) அடி (2) கடி (3) முடி (4) பிடி (5) குடி (……)

1.15 'பார்' என்ற துணைவினை 'முயற்சித்தல்' என்ற பொருளில் இடம்பெற்ற வாக்கியம்
(1) புதுச் சட்டையைப் போட்டுப்பார்த்தேன்.
(2) கவிதை ஒன்றை எழுதிப்பார்த்தேன்.
(3) கால் தவறி விழப்பார்த்தேன்.
(4) பிரச்சினைகளை ஆராய்ந்துபார்த்தேன்.
(5) குடியிருப்பதற்கு ஒரு வீடு பார்த்தேன். (……)

1.16 'உம்' இடைச்சொல் முற்றுப்பொருளில் இடம்பெற்ற வாக்கியம்
(1) கடதாசியாலும் பூக்கள் செய்யலாம்.
(2) மழை முழுமையாக நின்றதும் புறப்படுவோம்.
(3) கெஞ்சிக் கேட்டாலும் தரமாட்டான்.
(4) தெரிந்தவர்கள் யாரேனும் வந்திருக்கிறார்களா?
(5) வாயில் வந்த எல்லாவற்றையும் பேசலாமா? (……)

[பக். 3 ஐப் பார்க்க

1.17 பின்வருவனவற்றுள் செயப்படுபொருள் தொக்க வாக்கியம்
(1) அப்பா படித்துக்கொண்டிருக்கிறார்.
(2) அப்பா கதையோட்டத்தில் கலந்துவிட்டார்.
(3) அப்பா கதையில் மூழ்கிவிட்டார்.
(4) அப்பா கதையால் கவரப்பட்டார்.
(5) அப்பா கதையோடு ஒன்றிவிட்டார். (……)

1.18 எதிர்மறை இடைநிலை மூலம் எதிர்மறை வாக்கியமாக்கத்தக்கது
(1) என்னிடம் அந்தப்புத்தகம் இருக்கிறது.
(2) அவள் பாடங்களை நன்கு விளங்கிக்கொண்டாள்.
(3) இந்தக் கட்டுரை நன்றாக எழுதப்பட்டுள்ளது.
(4) அவன் நாளை என்னைச் சந்திக்க வருவான்.
(5) இது எங்கள் ஊரில் உள்ள பெரிய குளம். (……)

1.19 வாக்கிய இணைப்பின்போது, பயனிலை தன்மைப்பன்மை வினைமுற்றாக அமையத்தக்க தனிவாக்கியங்கள்
(1) அவனிடம் நல்ல அறிவு உள்ளது. + அவனிடம் நல்ல குணங்கள் உள்ளன.
(2) நீ கவனமாகப் படிக்கிறாயில்லை. + அவன் கவனமாகப் படிக்கிறானில்லை.
(3) நண்பன் உயர்கல்வியில் கவனம் செலுத்தினான். + நான் உழைப்பதில் கவனம் செலுத்தினேன்.
(4) எனக்கு சினிமா பார்ப்பது பிடிக்கும். + என் நண்பனுக்கு சங்கீதம் கேட்பது பிடிக்கும்.
(5) இட்டலி எனக்குப் பிடித்த உணவு. + தோசை தம்பிக்குப் பிடித்த உணவு. (……)

1.20 செயப்பாட்டுவினை வாக்கியமாக மாற்றமுடியாதது எது?
(1) காந்தன் பெரிய பெரிய வேலைகளையெல்லாம் செய்கிறான்.
(2) அவன் தன்னைப் பெரிய ஆளாகக் கருதுகிறான்.
(3) வேட்டைப் பிரியர்கள் விலங்குகளைக் கொடூரமாக வேட்டையாடுகிறார்கள்.
(4) ஊடகங்கள் அதிகாரிகளின் ஊழல்களை அம்பலப்படுத்துகின்றன.
(5) நீதித்துறை சில வேளைகளில் நிரபராதிகளையும் தண்டித்துவிடுகிறது. (……)

(20 புள்ளிகள்)

❊ ❊

[பக். 4 ஐப் பார்க்க

PAST PAPERS WIKI

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / முழுப் பதிப்புரிமையுடையது /All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2025
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2025
General Certificate of Education (Adv. Level) Examination, 2025

දෙමළ II
தமிழ் II
Tamil II

72 T II

**அறிவுறுத்தல்கள் :**

※ பகுதி **I** இல் உள்ள **2** ஆம், **3** ஆம் வினாக்களுக்கும்,

※ பகுதி **II** இல் எவையேனும் **இரண்டு** வினாக்களுக்கும் விடை எழுதுக.

## பகுதி I

**2.** (அ) பின்வரும் உரைப்பகுதியை **50** சொற்களில் சுருக்கி எழுதுக.

சங்க காலப் புலவர்கள் காதலையும், வீரம் கொடை முதலியவற்றையும் பொருளாகக் கொண்டு பாடியபோதிலும், நிகழ்ச்சிகளுக்குப் பின்னணியாக அவர்கள் அமைத்த இயற்கைக் காட்சிகள் சிறப்பாக அமைந்திருக்கின்றன. வானத்தின் விந்தையான காட்சிகள், மலையின் எழிலான தோற்றங்கள், காடுகளின் அழகிய மரஞ் செடி கொடிகள், விலங்குகள், பறவைகள், குளங்களின் தாமரை முதலிய பூக்கள், கடற்கரையின் சோலைகள், பருவக்காற்றுகள் முதலிய பலவும் அவர்களின் உள்ளம் கவர்ந்து விருந்து அளித்தன. அவர்கள் பெற்று மகிழ்ந்த இயற்கையழகு என்னும் விருந்தைப் பிறரும் நுகருமாறு சொல்லோவியங்களாகத் தீட்டி அளித்துள்ளார்கள். ஆனால் எல்லாப் பாட்டுக்களிலும் முதன்மையான நோக்கம் காதல் அல்லது வீரம், கொடை முதலியவற்றைப் பாடுவதே; இயற்கையின் அழகு, காதல் நிகழ்ச்சிக்கோ மற்ற நிகழ்ச்சிக்கோ பின்னணியாக வந்து இரண்டாம் இடமே பெறுகிறது. ஆயினும், அந்தப் பாட்டுகளின் இயற்கை வருணனை மறக்கமுடியாதவாறு நெஞ்சில் அழகுணர்ச்சியைப் பதியச் செய்கிறது.

பிற்காலத்தார் அந்த வருணனைகளைப் போற்றித் தம் நெஞ்சத்தைப் பறிகொடுத்துள்ளனர் என்பது பல குறிப்புகளால் விளங்குகிறது. சங்கப் பாட்டுகள் பல அங்கங்கே சிதறிக்கிடந்து பிறகு வந்தவர்கள் அவற்றைத் தொகுக்க முற்பட்டார்கள் அல்லவா? அப்போது, சில ஊர்களில் சில பல பாட்டுகள் மட்டும் கிடைத்தன; பாடிய புலவர்களின் பெயர்களும் வரலாறுகளும் கிடைக்கவில்லை. அந்த நிலையில் புலவர் சிலருக்குப் பெயர் குறிக்கவேண்டுமே என்று கவலைப்பட்டபோது, அந்தப் பாட்டுகளில் உள்ள இயற்கை வருணனைகள் அவர்களுக்கு உதவியாக இருந்தன. அந்த இயற்கைக் காட்சிகளைப்பற்றி விளக்கும் தொடர்களில் மிகக் கவர்ச்சியான ஒன்றைக் கொண்டே புலவரின் பெயர் அமைத்துக்கொண்டனர்.

செம்மண் நிலத்தில் பெய்த மழை நீர் பற்றிய தொடரால் ஒரு புலவர் செம்புலப்பெயல் நீரார் என்று குறிக்கப்பட்டார். பாழடைந்த ஒரு சிற்றூரின் வீட்டு முற்றத்தில் விளையாடும் அணில் பற்றிய காட்சியை விளக்கிய புலவர் அணிலாடுமுன்றிலார் எனப்பட்டார். இரண்டு யானைகளின் துதிக்கைகளால் பற்றி இழுக்கப்படும் பழங்கயிறு பற்றிப் பாடியவர் தேய்புரிப் பழங்கயிற்றினார் எனப்பட்டார்.

(13 புள்ளிகள்)

[பக். 5 ஐப் பார்க்க

(ஆ) பின்வரும் உரைப்பகுதியை வாசித்து, அதன்கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

பாரதியாரின் கவிதையைப் படிக்கும்போது முதலிலே புலப்படுவன அதன் எளிமையும் உணர்ச்சி வேகமும் ஆகும். அடிமைப்பட்டுக்கிடக்கும் பாரத நாட்டுக்கு விடுதலை வேண்டும் என்ற உணர்ச்சி அவருடைய உள்ளத்திலே பொங்குகிறது. அவருக்கு இயல்பாகவே அமைந்த கவியாற்றலினாலே அந்த உணர்ச்சி உண்மையான வடிவத்தைப் பெறுகிறது. உள்ளத்திலே தெளிவு இருக்கும்போது இது தெள்ளிய, எளிய முறையிலே அனைவருக்கும் புரியும்படியாக வெளிப்படுகின்றது. அந்தத் தெளிவும் உணர்ச்சியும் இல்லாதபோது வார்த்தைகள் நேராக வருவதில்லை; பின்னிக் கொள்ளுகின்றன; மனப்பாடம் செய்த நிகண்டுகளிடம் தஞ்சம்புக நேரிடுகின்றது.

'புனர்ஜன்மம்' என்ற கட்டுரையிலே பாரதியார் கவிதை பற்றிய தனது கருத்தைத் தெளிவாக விளக்கியிருக்கிறார். "நமது கவிதையிலே ஆனந்தம் குறையத் தொடங்கிற்று; ருசி குறைந்தது; கரடு முரடான கல்லும் கள்ளி முள்ளும் போன்ற பாதை, நமது கவிஞர்களுக்கு நல்ல பாதையாகத் தோன்றலாயிற்று. கவிராயர், 'கண்' என்பதை 'சக்கு' என்று சொல்லத் தொடங்கினர். ரஸம் குறைந்தது; சக்கை அதிகப்பட்டது; உண்மை குறைந்தது; பின்னல் திறமைகள் அதிகப்பட்டன. கவிதையிலே ஒளி, தெளிவு, குளிர்ந்த நடை மூன்றும் இருக்கவேண்டும் என்பது கம்பனுடைய மதமாகும். இதுவே நியாயமான கொள்கை."

(i) பாரதியாரின் கவிதையைப் படிக்கும்போது முதலிலே புலப்படும் விடயங்கள் யாவை?

(ii) பாரதியாருக்கு இயல்பாகவே உள்ள கவியாற்றலினால் உண்மையான வடிவத்தைப் பெறுவது எது?

(iii) உள்ளத்திலே தெளிவு இருக்கும்போது உணர்ச்சி வெளிப்பாட்டில் உண்டாகும் சாதகமான அம்சம் யாது?

(iv) உள்ளத்திலே தெளிவு இல்லாதபோது உணர்ச்சி வெளிப்பாட்டில் உண்டாகும் பாதகங்கள் யாவை?

(v) கவிதை பற்றிய கம்பனுடைய கொள்கை யாது?

(vi) அந்தக் கொள்கை பாரதியாருக்கும் உடன்பாடானதா? அது எவ்வாறு புலனாகின்றது?

(12 புள்ளிகள்)

(13 + 12= 25 புள்ளிகள்)

**3.** பின்வருவனவற்றுள் யாதேனும் **ஒரு** தலைப்பினைத் தெரிந்து **300 - 350** சொற்கள் கொண்ட கட்டுரை எழுதுக.

(அ) செயற்கை நுண்ணறிவும் அதன் விளைவுகளும்

(ஆ) ஒழுக்கக் கல்வியின் முக்கியத்துவம்

(இ) கிராமிய வாழ்வும் நாட்டார் பாடல்களும்

(ஈ) வெளிநாட்டு வேலைவாய்ப்பு: சாதக பாதகங்கள்

(உ) 'நினைவு நல்லது வேண்டும்'

(25 புள்ளிகள்)

## பகுதி II

**4.** (அ) எட்டுத்தொகையிலும் பத்துப்பாட்டிலும் அடங்கும் புறத்திணை நூல்களைக் குறிப்பிடுக.

(ஆ) சங்ககாலப் புறத்திணை இலக்கிய மரபின் பொதுப் பண்புகளைத் தெளிவுறுத்துக.

(இ) பதிற்றுப்பத்து நூல் பற்றிச் சுருக்கமாக விளக்குக.

(15 புள்ளிகள்)

[பக். 6 ஐப் பார்க்க

Past Papers Wiki



**5.** (அ) ஐரோப்பியர் ஆட்சிக் காலப் பகுதியில் தமிழ் உரைநடை வளர்ச்சிக்கு வாய்ப்பாக அமைந்த பின்னணியை விளக்குக.

(ஆ) அக்காலப் பகுதியிலே தமிழ் உரைநடை வளர்ச்சிக்கு முக்கிய பங்களிப்பு நல்கியவர்கள் குறித்துக் கருத்துரைக்குக.

(இ) இருபதாம் நூற்றாண்டின் முதல் ஐம்பது ஆண்டுகளில் சிறுகதை எனும் உரைநடை இலக்கியம் தோன்றி வளர்ந்தவாற்றைத் தெளிவுறுத்துக.

(15 புள்ளிகள்)

**6.** (அ) ஈழத்தில் எழுந்த மரபுவழிப் புராணங்கள் பற்றிக் கருத்துரைக்குக.

(ஆ) ஈழத்தில் எழுந்த மரபுவழித் தூது இலக்கியங்கள் குறித்து விவரிக்குக.

(இ) ஈழத்தில் புராணம், தூது என்னும் இலக்கிய வடிவங்கள் நவீன நோக்கில் கையாளப்பட்டவாற்றைத் தெளிவுறுத்துக.

(15 புள்ளிகள்)

**7.** பின்வருவோரில் யாரேனும் மூவர் ஈழத்திலே தமிழிலக்கிய வளர்ச்சிக்கு ஆற்றிய பங்களிப்பை மதிப்பிடுக.

(அ) ஆறுமுக நாவலர்

(ஆ) சித்திலெப்பை

(இ) விபுலாநந்தர்

(ஈ) தனிநாயக அடிகள்

(உ) குறிஞ்சித் தென்னவன்

(15 புள்ளிகள்)

**8.** (அ) (i) 'நில்' என்பதை நிலைமொழியாகக் கொண்டு அகப்புணர்ச்சி, புறப்புணர்ச்சி ஆகியவற்றுக்கு ஒவ்வோர் உதாரணம் தருக.

(ii) 'வை' என்ற சொல் முதல்வினையாகவும் துணைவினையாகவும் வருவதற்கு ஒவ்வோர் உதாரணம் தருக.

(iii) 'அழை', 'அளை' ஆகிய சொற்களை அவற்றின் பொருள் விளங்கத்தக்க வகையில் ஒவ்வோர் வாக்கியத்தில் அமைத்து எழுதுக.

(iv) 'உம்' எனும் இடைச்சொல் ஐயம், எச்சம் ஆகிய பொருள்களைத் தரும் வகையில் ஒவ்வோர் வாக்கியம் எழுதுக.

(v) பின்வரும் வாக்கியத்தில் இடம்பெற்றுள்ள வழுவை இனங்கண்டு, வழுவற்ற வகையில் அவ்வாக்கியத்தைத் திருத்தி எழுதுக.

தேசிய மட்ட விளையாட்டுப் போட்டியில் கம்பகா மாவட்டம் முதலாம் இடத்தையும் இரண்டாம் இடத்தை களுத்துறை மாவட்டமும் பெற்றுக்கொண்டன.

(10 புள்ளிகள்)

(ஆ) பின்வருவனவற்றுள் ஏதேனும் **ஒன்று** பற்றி, சிறுகுறிப்பு வரைக.

(i) தன்வினை - பிறவினை

(ii) தனிவினை - கூட்டுவினை

(iii) கூட்டுப்பெயர் - ஆக்கப்பெயர்

(05 புள்ளிகள்)

(10 + 05 = 15 புள்ளிகள்)

* * *

අ.පො.ස උසස් පෙළ සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

Past Papers Wiki
PAST PAPERS WIKI
WWW.PastPapers.WiKi
Downloaded From Past Papers WiKi - Sri Lanka's Largest Past Papers Library